


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.2.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு முழுவதும் உள்ள மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிகள் குழு நேரில் சந்தித்து, கடந்த ஐந்து ஆண்டுகளாக முகாம் வாழ் தமிழர்களுக்காக செயல்படுத்திவரும் பல்வேறு சிறப்பான நலத்திட்டங்களுக்கும். வாழ்வுரிமைக்கான நிரந்தர சட்டப்பூர்வமான தீர்வை பெற இந்தியப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதியதற்காகவும், தொடர்ந்து எடுத்துவரும் முயற்சிகளுக்காகவும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர். இச்சந்திப்பின்போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், பொதுத்துறை அரசு கூடுதல் செயலாளர் கி. பாலசுப்ரமணியம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.2.2026) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற சாம்பியன்ஸ் ஆப் தமிழ்நாடு ஐந்தாண்டு கால விளையாட்டுச் சாதனை விழாவில், விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் 62 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட 178 விளையாட்டு வீரர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண பிரதமருக்கு கடிதம்!

# முதல்வரை - இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிகள் குழு நேரில் சந்தித்து நன்றி!

**சென்னை, பிப்.20-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.2.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு முழுவதும் உள்ள மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிகள் குழு, நேரில் சந்தித்து, கடந்த ஐந்து ஆண்டுகளாக முகாம் வாழ் தமிழர்களுக்காக செயல்படுத்திவரும் பல்வேறு சிறப்பான நலத்திட்டங்களுக்கும், வாழ்வுரிமைக்கான நிரந்தர சட்டப்பூர்வமான தீர்வை பெற இந்தியப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதியதற்காகவும், தொடர்ந்து எடுத்துவரும் முயற்சிகளுக்காகவும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர்.**

40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை, நீண்ட கால விசா வழங்குதல் உள்ளிட்ட நிலையான மற்றும் மனிதாபிமான அடிப்படையிலான நிரந்தர தீர்வு காணுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.2.2026 அன்று, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

மேலும், இலங்கை தமிழர்கள் முகாம்களுக்கே நேரில் வந்து பார்வையிட்டு, தங்களின் குறைகளைக் கேட்டறிந்து அதனை நிறைவேற்றி வருவதற்கும், பல்லாண்டுகளாக "அகதிகள் முகாம்' என்று அழைக்கப்பட்ட தங்களது வாழ்விடங்களை, "மறுவாழ்வு முகாம்" எனப் பெயர் மாற்றம் செய்ததற்கும், இந்த ஐந்து ஆண்டுகளில் 5,920 புதிய கான்கிரீட் வீடுகளைக் கட்டிக்கொடுத்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியவருவதோடு மட்டு மல்லாமல், தற்சார்பு மற்றும் எதிர்கால நம்பிக்கைக்கு தொழிற்கூடங்கள் அமைத்து தந்ததற்கும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

முகாம் வாழ் தமிழர்களின் நன்றியை ஏற்றுக்கொண்ட முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் நலன், கண்ணியம் மற்றும் சட்ட உரிமைகளை உறுதி செய்வதில் இவ்வரசு எப்போதும் உறுதியாக இருக்கும் என்று அவர்களிடம் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது, சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், பொதுத்துறை அரசு கூடுதல் செயலாளர் கி.பாலசுப்ரமணியம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை இந்தியா கூட்டணித் தலைவராக்க வேண்டும்!

## சிவசேனா கட்சி வலியுறுத்தல்!

*மும்பை, பிப்.20-*

*தி.மு.க. தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அல்லது மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜியை இந்தியா கூட்டணியின் தலைவராக்க வேண்டும் என்று உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா கட்சி வலியுறுத்தியுள்ளது.*

*சிவசேனாவின் 'சாம்னா' பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரையில், பா.ஜ.க.,வின் ஆதிக்கத்தை வீழ்த்த வேண்டுமானால், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அல்லது மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி போன்ற ஒரு வலிமையான தலைவரை இந்தியா கூட்டணியின் தலைவராக இப்போதே அறிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.*

*திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அல்லது திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தலைவர் மம்தா பானர்ஜி ஆகியோரில் ஒருவர் இந்தியா கூட்டணியின் தலைவராக வேண்டியது மிக, மிக அவசியம் மற்றும் அவசர தேவை என்றும் உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா கட்சி தெரிவித்துள்ளது.*

*மதத்தை வைத்து அரசியல் செய்யும் பா.ஜ.க.,வை வீழ்த்த, தேர்தல் வரும் வரை காத்திருக்காமல் ஒரு தெளிவான தலைமையின் கீழ் அணி திரள்வது காலத்தின் கட்டாயம் என்றும் உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா கட்சி தெரிவித்துள்ளது.*


## மதுரையில் 1.89 லட்சம் பேர் பங்கேற்கும்

# தென்மண்டல பாகமுகவர்கள் மாநாடு: கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரை!

## நாடே திரும்பிப் பார்க்கச் செய்யும் மாநாடாக அமையும் – வடக்கு மாவட்ச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி பேச்சு!

மதுரை,பிப்.20-

மதுரையில் வரும் 21 ஆம் தேதி தென் மண்டல வாக்குச்சாவடி கழக பாகமூவர்கள் பயிற்சி மாநாடு வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. இதில் 1.89 லட்சம் பாகமூவர்கள் பங்கேற்று பயிற்சி பெறுகின்றார்கள். மதுரை உத்தங்குடி கலைஞர் திட்டத்தில் நடைபெற உள்ள இந்த மாநாட்டில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுச்சி உரையாற்ற உள்ளார். இந்த மாநாடு தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டையே திரும்பிப் பார்க்க செய்யும் மாநாடாகவும் 2026 சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியை தேடித் தரும் மாநாடாக அமையும் என கலைஞர் திடலில் நடைபெற்ற அனைத்து அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி பேசினார், அதன் விவரம்.





மதுரை உத்தங்குடி கலைஞர் திடலில் நாளை 21/2/2026 ஆம் தேதி மாலை வேலையில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தென் மண்டல பாகமுகவர்கள் பயிற்சி மாநாட்டில் பங்கேற்று எழுச்சி உரையாற்ற உள்ளார். இந்த மாபெரும் மாநாட்டில் மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தேனி, சிவகங்கை, ராமநாதபுரம், தென்காசி, நெல்லை, கன்னியாகுமரி உள்ளிட்ட 20 மாவட்டங்களைச் சேர்ந்த 58 தொகுதிகளுக்கு உட்பட்ட சுமார் 1.89லட்சம் பிஎல்ஏ2, பிஎல்சி மற்றும் பிஎல்டி பாகமுகவர்கள் பங்கேற்க உள்ளனர்.



முன்னதாக விழாவில் பங்கேற்க வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் அவர்களுக்கு மதுரை மீனாட்சி மிஷின் மருத்துவமனை முதல் விழா மேடை வரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பல்லாயிரக்கணக்கான பெண்கள், நிர்வாகிகள், கையில் இருவர்ணக் கொடி ஏந்தி உற்சாக வரவேற்பு கொடுக்கின்றனர்.

மாநாட்டு நுழைவாயில் மிக பிரம்மாண்டமாக அனைவரும் பார்த்து மகிழும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் விழாவில் பங்கேற்க வருபவர்கள் அனைவருக்கும் வாகனம் நிறுத்தும் இடமும், போக்குவரத்து நெரிசலின்றி விழா மைதானத்திற்கு வரும் வகையில் பிரத்தியேக சாலை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. வெளிநபர்கள் யாரும் உள்ளே வராத வகையில் க்யூஆர் கோடு மூலம் பதிவு செய்த நபர்கள் மட்டுமே விழா அரங்கிற்குள் அனுமதிக்கப்பட உள்ளனர்.

மேலும் விழாவில் பங்கேற்கும் அனைவருக்கும் அவர்கள் இருப்பிடத்திற்கே உணவு, பிஸ்கட், தண்ணீர் பாட்டில் உள்ளிட்ட பொருட்கள் சிறப்பாக தலைவர், துணை முதல்வர், படத்துடன் பொறித்த பையில் கருப்பு சிவப்பு துண்டுடன் வழங்கி அவர்களை மகிழ்விக்க பிரத்தியேக ஏற்பா'டுகள் செய்யப்பட்டுள்ளது.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் மேடை கம்பீரமாக அமைக்கப்பட்டு மாநாடு திடல் முழுவதும் மின் விளக்குகள் அமைக்கப்பட்டு மாலை நேரமே பகல் போல் மின்னொளியில் மின்னும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொகுதி வாரியாக தனித்தனியாக முகவர்கள் அமரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு அவர்களுக்கு உணவு வழங்க தயார் நிலையில் தனித்தனித் தனி குழுவினர்கள் இருப்பார்கள்.

ஒருவருக்கு கூட உணவு, குடிநீர் இல்லை என்று எவரும் கூறிடாத வகையில் சிறப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளது.

மேலும் எல்லோரும் இருக்கையில் அமர்ந்து பார்க்க அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் வசதி, சுகாதார வசதி, தீயணைப்புத் துறை, கழிப்பறை வசதி என அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

### பிரம்மாண்ட மேடை

மாநாட்டில் இதுவரையில் எங்கும் அமைக்கப்படாத வகையில் பிரம்மாண்ட மேடை அமைக்கப்பட்டு, கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சர் பெருமக்கள், மாவட்ட செயலாளர்கள், கழக முன்னணி நிர்வாகிகள் அமர்ந்து பார்க்கும் வகையில் சிறப்பான ஏற்பாடுகள் எல்இடி வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தென்மண்டல பாகமூவர்கள் பயிற்சி மாநாடு இதுவரையில் தமிழ்நாட்டில் எங்கும் நடைபெறவில்லை என்ற சிறப்பை பெறும் வகையில் இது தமிழ்நாட்டில் நடைபெற உள்ள 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் திமுக கூட்டணி மாபெரும் வெற்றியை தேடித் தரும் மாநாடாக அமையும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இருக்கும் என்பதில் மாற்றமில்லை என்று மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பேசினார்.

கூட்டத்தில் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்டக்கழக செயலாளர்கள், நிர்வாகி கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சுற்றுலா துறை சார்பில்

# முதலீட்டாளர்களுக்கு உதவ சுற்றுலா செயல்முறை மையம்!

## அமைச்சர் இரா. இராஜேந்திரன் தகவல்!




சென்னை, பிப். 20 -

சுற்றுலா துறை சார்பில் முதலீட்டாளர்களுக்கு உதவ சுற்றுலா செயல்முறை மையம் அமைக்கப்பட்டுள்ளது என்று சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான செய்தி குறிப்பு வருமாறு:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு உலக சுற்றுலா உச்சி மாநாடு 2026 மூலம் கிடைத்த பெரும் முதலீட்டு வாய்ப்புகளை விரைவாக செயல்படுத்தவும், முதலீட்டாளர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்கவும் சுற்றுலா செயல்முறை மையம் (Tourism Facilitation Cell) அமைக்கப்பட்டுள்ளது.

**சுற்றுலா செயல்முறை மையம்** (Tourism Facilitation Cell)

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலா கொள்கை 2023-ன் முக்கிய நோக்கம், மாநிலத்தில் தனியார் முதலீடுகளை ஊக்குவித்து சுற்றுலாத்துறையை விரைவாக வளர்ச்சியடையச் செய்வதாகும். வெற்றிகரமாக நடைபெற்ற தமிழ்நாடு உலக சுற்றுலா உச்சி மாநாடு 2026 மூலம் மாநிலத்திற்கு ரூபாய் 22,795 கோடி மதிப்பிலான முதலீடுகளை உள்ளடக்கிய 127 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) கையெழுத்திடப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக முதலீட்டாளர் களுக்கு விரைவான சேவைகளை வழங்குவதில் சுற்றுலா செயல்முறை மையம் (Tourism Facilitation Cell) மிக முக்கிய பங்காற்றும்.

**இந்த சுற்றுலா செயல்முறை மையம் சுற்றுலா ஆணையர் அவர்களின் தலைமையில் கீழ்க்கண்ட அலுவலர்களுடன் செயல்படும்;**

1. இணை இயக்குநர், சுற்றுலாத் துறை,

2. பொது மேலாளர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம்,

3. உதவி சுற்றுலா அலுவலர் நிலை -2

4. தமிழ்நாடு வழிகாட்டுதல் நிறுவனத்தின் உறுப்பினர்.

ஒருங்கிணைந்த ஒற்றை சாளர அனுமதி (Single Window Clearance)

தமிழ்நாடு அரசின் நிறுவனமான Guidance Tamil Nadu மூலம் செயல்படும் Single Window Portal, தனியார் திட்டங்களுக்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் ஒரே இடத்தில் பெறுவதற்கான வசதியை வழங்கும்.

இந்த வசதி மூலம்:

• தேவையான ஆதார ஆவணங்களை ஒரே தளத்தில் சமர்ப்பிக்கலாம்.

• விண்ணப்பதாரர் மற்றும் அதிகாரிகள் இடையிலான தகவல் பரிமாற்றம் எளிதாக்கப்படும்.

• விண்ணப்பத்தின் நிலையை கண்காணிக்க முடியும்.

• காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட முறையில் அனுமதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்யப்படும்.

**சுற்றுலா வசதி ஒருங்கிணைப்பு மையம்** (Tourism Facilitation Cell)

•Guidance Tamil Nadu மாநில அரசின் முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமாக செயல்படுகிறது. முதலீட்டா ளர் களுக்கு உதவுவதற்காக Biz Buddy உதவி மையமும் இயங்கி வருகிறது.

• இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில், சுற்றுலாத் துறை துறையின் கீழ் Tourism Facilitation Cell அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளும்:

• சுற்றுலாத்துறையில் புதிய முதலீடுகளை ஈர்த்தல்.

• மாநிலத்தில் நடைபெற்று வரும் தனியார் / PPP திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு.

•புதிய சந்தைகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க தேவையான சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை அடையாளம் காணுதல்.

•தனியார் முதலீட்டாளர்களுக்கு தேவையான அனுமதிகளைப் பெற வழிகாட்டுதல் மற்றும் அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைப்பு.

• மாநில சுற்றுலா வளர்ச்சியைப் பற்றிய காலாண்டு அறிக்கைகளை வெளியிடுதல்.

தமிழ்நாடு உலக சுற்றுலா உச்சி மாநாடு 2026 மூலம் கிடைத்த பெரும் முதலீட்டு வாய்ப்புகளை விரைவாக செயல்படுத்தவும், முதலீட்டாளர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்கவும் Tourism Facilitation Cell முக்கிய செயல்முறையாக செயல்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.



வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க ஒன்றிய கழக, பகுதி கழக, பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் மகளிர் பிரதிநிதிகளின் பங்களிப்போடு பாகம் வாரியாக நடைபெறவுள்ள "தமிழ்நாடு தலைகுனியாது" சிறப்பு பரப்புரை முன்னெடுப்புக் கான திட்டமிடுதல், தலைமைக்கழகம் சார்பில் வேலூர் வடக்கு மாவட்ட அளவில் நடைபெறும் நட்சத்திர பேச்சாளர்கள் சார்ந்த கூட்டங்களுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

# புதுச்சேரி - காலாப்பட்டு, முத்தியால்பேட்டை, உப்பளம் தொகுதி கழக நிர்வாகிகளுக்கு வேண்டுகோள்!

## இரா. சிவா எம்.எல்.ஏ. அறிக்கை!



*புதுவை, பிப்.20-*

*காலாப்பட்டு, முத்தியால்பேட்டை, உப்பளம் தொகுதியில் இன்று தொகுதி வாரியாக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது என்று மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:*

*கழகத் தலைவர், தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர் அவர்கள் தொகுதி வாரியாக செயல் வீரர்கள் கூட்டம் நடத்தி தேர்தல் குறித்த ஆலோசனைகள் வழங்க அறிவுறுத்தியதின்பேரில், இன்று (20.02.2026) புதுச்சேரி மாநில கழக ஒருங்கிணைப்பாளர், கழக பாராளுமன்ற உறுப்பினர், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கும் நிகழ்ச்சி கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு நடைபெறுகிறது.*

*இந்த செயல்வீரர்கள் கூட்டத்தில் மேற்கண்ட தொகுதிகளைச் சேர்ந்த தொகுதி கழக, மாநில கழக, கிளைக் கழக நிர்வாகிகள் பங்கேற்று தலைமைக் கழகம் வழங்கும் ஆலோசனைகளைப் பெற்று பணியாற்றிட வேண்டுகிறேன்.*

*காலாப்பட்டு சட்டமன்றத் தொகுதி*

*• இடம்: - வள்ளி திருமண நிலையம் - பெரிய காலாப்பட்டு பாலமுருகன் கோவில் அருகில்*

*நேரம்: - காலை 09.30 மணி முதல் 10.30 மணி வரை முத்தியால்பேட்டை சட்டமன்றத் தொகுதி*

*இடம்: - லலிதா திருமண நிலையம் - முத்தியால்பேட்டை பெருமாள் கோவில் அருகில்*

*நேரம்: - காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை, உப்பளம் சட்டமன்றத் தொகுதி*

*• இடம்: - மஹாலட்சுமி திருமண நிலையம் - சின்ன மணிக்கூண்டு, புதுச்சேரி.*

*நேரம்: - காலை 12.00 மணி முதல் 01.00 மணி வரை மேற்கண்டவாறு மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா, எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.*